**சுருக்கம்**

உயர்கல்வி – கல்லூரிக் கல்வி – பல்வேறு பல்கலைக்கழகங்களின் கீழ் இயங்கிவரும் 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதற்கட்டமாக 1995–96–ஆம் ஆண்டு முதல் 2010–11–ஆம் ஆண்டு வரை துவங்கப்பட்ட 14 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்பட்டது – மீதமுள்ள 27 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரசு கல்லூரிகளாக மாற்றம் செய்து ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**உயர்கல்வி (ஜி1) துறை**

அரசாணை (நிலை) எண்.184 நாள் 11.12.2020.

சார்வரி, கார்த்திகை – 26.
திருவள்ளுவர் ஆண்டு, 2051
படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.35, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 08.02.2011.
2. அரசாணை (நிலை) எண்.160, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 13.07.2011.
3. அரசாணை (நிலை) எண்.164, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 15.07.2011.
4. அரசாணை (நிலை) எண்.169, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 22.07.2011.
5. அரசாணை (நிலை) எண்.170, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 22.07.2011.
6. அரசாணை (நிலை) எண்.81, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 29.05.2012.
7. அரசாணை (நிலை) எண்.97, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 14.06.2013.
8. அரசாணை (நிலை) எண்.162, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 10.09.2013.
9. அரசாணை (நிலை) எண்.98, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 17.06.2013.
10. அரசாணை (நிலை) எண்.198, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 24.07.2017.
11. அரசாணை (நிலை) எண்.36, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 29.02.2019.
12. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித எண் 23541/க்யூ2/2018, நாள் 29.02.2020.

* * * * *

ஆணை:–

01.06.2018 அன்று 2018–19–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:-

> "தமிழ்நாட்டில் உள்ள 41 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள் அனைத்தும் நடப்பு கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்படும். இதற்கென ஆண்டிற்கு 152.00 கோடியே 20 இலட்சம் ரூபாய் தொடரும் செலவினம் ஆகும்."

2. மேற்படி அறிவிப்புக்கிணங்க, மேலே 11வதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2018–19–ஆம் கல்வியாண்டு முதல் 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதற்கட்டமாக 1995–96–ஆம் ஆண்டு முதல் 2010–11–ஆம் ஆண்டு வரை துவக்கப்பட்ட 14 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டு அக்கல்லூரிகளுக்கு, 42 ஆசிரியரல்லா பணியிடங்கள், 777 ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 140 அடிப்படை

பணியிடங்கள் தோற்றுவிக்க ஆண்டொன்றுக்கு முறையே ரூ4,53,57,648/–, ரூ58,64,14,332/– மற்றும் ரூ.5,23,69,800/– செலவில் நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டது.

3. மேலே, 12–வதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கல்லூரிக்கல்வி இயக்குநர் மேலே 1 முதல் 10 வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் தோற்றுவிக்கப்பட்ட 27 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றுவதற்கு நிர்வாக அனுமதியும் அக்கல்லூரிக்கு தேவைப்படும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்களை தோற்றுவித்தும் அதற்கான, ஓராண்டிற்கான செலவினமாக ரூ.143,74,53,540/– நிதி ஒதுக்கீடு வழங்கி ஆணை வழங்குமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்கண்ட கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, மேலே 1 முதல் 10 வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் தோற்றுவிக்கப்பட்ட 27 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்கள் அனைவருக்கும் ஊதியம் / மதிப்பூதியத்திற்கான செலவினத் தொகையினை சார்ந்த பல்கலைக்கழகங்களே இக்கல்வியாண்டு வழங்க வேண்டும் என்றும், இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 27 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக 2020–21–ஆம் கல்வியாண்டு முதல் மாற்றம் செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.37386/Edn-1/2020 மற்றும் 50/DS (KU)/2020, நாள் 18.11.2020–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ), சென்னை–6.
உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகப் பதிவாளர்கள்.
சம்பந்தப்பட்ட மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்குநர்கள்.
(கல்லூரிக்கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) வழியாக)
சார்ந்த கல்லூரி முதல்வர்கள் (கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–1/35/15.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
சார்ந்த கருவூல அலுவலர்.

நகல்:–
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
உயர்கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், உயர்கல்வித் துறை, சென்னை–9.
நிதித் (கல்வி–I / வ.செ.பொது–I / வ.செ.பொது–II / சி.எம்.பி.சி.) துறை, சென்னை–9.
இ.கோ. / உதிரிகள்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

தி.மனோகரன்
11/12/2020
பிரிவு அலுவலர்

## இணைப்பு–I

**அரசாணை (நிலை) எண்.184, உயர் கல்வித் (ஜி1) துறை, நாள் 11.12.2020**

| வ. எண் | பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியின் பெயர் | அரசுக் கல்லூரியாக மாற்றம் செய்யப்பட்ட கல்லூரியின் பெயர் |
|---|---|---|
| 1. | பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரூர், தருமபுரி மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரூர், தருமபுரி மாவட்டம். |
| 2. | சென்னை பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெம்மேலி, காஞ்சிபுரம் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெம்மேலி, செங்கல்பட்டு மாவட்டம். |
| 3. | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகலாபுரம், தூத்துக்குடி மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகலாபுரம், தூத்துக்குடி மாவட்டம். |
| 4. | திருவள்ளுவர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி மாவட்டம். |
| 5. | திருவள்ளுவர் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருப்பத்தூர், வேலூர் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம். |
| 6. | மதுரை காமராஜர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தூர், விருதுநகர் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தூர், விருதுநகர் மாவட்டம். |
| 7. | பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டம். |
| 8. | பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம். |
| 9. | பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம். |
| 10. | பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாப்பிரெட்டிபட்டி, தருமபுரி மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாப்பிரெட்டிபட்டி, தருமபுரி மாவட்டம். |
| 11. | பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நன்னிலம், திருவாரூர் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நன்னிலம், திருவாரூர் மாவட்டம். |
| 12. | பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, எடப்பாடி, சேலம் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, எடப்பாடி, சேலம் மாவட்டம். |
| 13. | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம். |
| 14. | மதுரை காமராஜர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம். |

| | | |
|---|---|---|
| 15. | பாரதியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம். |
| 16. | மதுரை காமராஜர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருமங்கலம், மதுரை மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருமங்கலம், மதுரை மாவட்டம். |
| 17. | சென்னை பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவொற்றியூர், திருவள்ளூர் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவொற்றியூர், திருவள்ளூர் மாவட்டம். |
| 18. | அழகப்பா பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம். |
| 19. | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கடையநல்லூர், திருநெல்வேலி மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கடையநல்லூர், தென்காசி மாவட்டம். |
| 20. | மதுரை காமராஜர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். |
| 21. | பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகப்பட்டினம், நாகபட்டினம் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகப்பட்டினம், நாகபட்டினம் மாவட்டம். |
| 22. | திருவள்ளுவர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரக்கோணம், வேலூர் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரக்கோணம் , இராணிப்பேட்டை மாவட்டம். |
| 23. | திருவள்ளுவர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திட்டக்குடி, கடலூர் மாவட்டம் | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திட்டக்குடி, கடலூர் மாவட்டம். |
| 24. | பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேப்பூர், பெரம்பலூர் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேப்பூர், பெரம்பலூர் மாவட்டம். |
| 25. | பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேந்தமங்களம், நாமக்கல் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேந்தமங்களம், நாமக்கல் மாவட்டம். |
| 26. | பாரதியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம். |
| 27 | பாரதியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தொண்டாமுத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தொண்டாமுத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம். |

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

க. தமோதரன்
11/12/2020
பிரிவு அலுவலர்